| | |
|---|---|
| Your Score Out of 20 marks | |

# PRIMARY SCHOOL


## SECOND SEMESTRAL ASSESSMENT - 2013

Name : ____________ Class: P4___ Index No: ____

TAMIL LANGUAGE Att:0hr 50min

COMPOSITION

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் படத்தொடரைப் பார்த்து 70 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுது. அதனடியில் கொடுக்கப்பட்டிருக்கும் உதவிச் சொற்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.



| | |
|---|---|
| கடைத்தொகுதிக்கு | நகரும் மின்படிகள் |
| கூட்டமாக | ஓடினான் |
| பலூன்களை | தலைக்குப்புற |
| கவரப்பட்டான் | அலறினான் |



P4 SA2

PRIMARY SCHOOL

SEMESTRAL ASSESSMENT 2 - 2013

TAMIL LANGUAGE

PAPER 2

PRIMARY 4

Name: ______________________ (    )

Class: Pri (    )

Date: __________

Parent's signature: ________________

## INSTRUCTIONS TO CANDIDATES

**Follow all instructions carefully.**
**Answer all questions.**

| Maximum Marks | Marks Obtained |
|---|---|
| | |

1 முதல் 14 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில், சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3, அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.

<u>வேற்றுமை உருபு</u>

கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான <u>வேற்றுமை உருபு</u> ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. பின் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (8 மதிப்பெண்கள்)

சமீபத்தில் ராமு அவனுடைய தாயாருடன் கேலாங் கடை தொகுதிக்குச் சென்றான். அங்கே நோன்புப் (1) _______________ தேவையான பல பொருள்கள் விற்கப்பட்டன. பாஜுகூரோங் தைக்க நான்கு மீட்டர் (2) _______________ அம்மா வாங்கினார். பலகாரம் விற்கும் (3) _______________ அன்னாசி பிஸ்கட்டைப் பார்த்தோம். அது எனக்கு மிகவும் பிடிக்கும். அதனால் அதையும் வாங்கிக்கொண்டோம். இறுதியாக (4) _______________சேர்ந்து குளிர்பானம் அருந்தினேன். நேரமாகிவிட்டதால் நாங்கள் வீட்டுக்குப் புறப்பட்டோம்.

1. (1) பெருநாளின்
(2) பெருநாளுக்கு
(3) பெருநாளில்
(4) பெருநாளை ( )

2. (1) துணியில்
(2) துணியின்
(3) துணியை ( )
(4) துணிக்கு

3. (1) கடையில்
(2) கடையை
(3) கடைக்கு
(4) கடையுடன் ( )

4. (1) அம்மாவை
(2) அம்மாவின்
(3) அம்மாவுக்கு
(4) அம்மாவோடு ( )

## செய்யுள் / பழமொழி

பின்வரும் செய்யுள்களில் / பழமொழிகளில் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு ஏற்ற சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை எழுது. பின் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

5. தேடாது _______________ பாடாய் முடியும்.

(1) அழித்தால்
(2) அழிப்பதால்
(3) அழித்தல்
(4) அழிக்கின்
( )

6. அறிஞர்க்கு அழகு _______________ அடங்கல்.

(1) விருந்தோடு
(2) பொருளோடு
(3) கற்றுணர்ந்து
(4) நினைத்து ( )

7. மந்திரிக்கு அழகு _______________ உரைத்தல்.

(1) வளர்பொருள்
(2) வரும்பொருள்
(3) கைப்பொருள்
(4) தன்பொருள் ( )

8. ஆத்திரக்காரனுக்கு ____________________ மட்டு.

(1) புத்தி
(2) அழகு
(3) அறிவு
(4) பலம் ( )

9. ஒன்றுபட்டால் உண்டு ____________________.

(1) வாழ்வு
(2) வறுமை
(3) வசதி
(4) வாக்கு ( )

கருத்தறிதல்

கீழ்க்காணும் பகுதியைக் கவனமாகப் படி.

ஓர் ஊரில் கண்ணுசாமி என்ற மூலிகை வைத்தியர் ஒருவர் இருந்தார். கபிலன், விமலன் என்ற இரு நண்பர்கள் அவரிடம் வைத்தியம் கற்றுக்கொள்ள வந்தனர். அதற்குக் கண்ணுசாமி புற்றுநோயைக் குணப்படுத்த உதவும் மூலிகை மலைமீது முளைத்திருக்கும். அதைத் தேடிப் பறித்துக் கொண்டு வருபவரை தன் மாணவனாக ஏற்றுக் கொள்வார், என்றார்.

இருவரும் மூலிகையைத் தேடிப் புறப்பட்டனர். இரண்டாம் நாள் கபிலன் மகிழ்ச்சியுடன் வைத்தியரிடம் வந்தான். அவனுடைய கையில் மூலிகை இருந்தது. ஆனால், விமலனோ நீண்டநேரம் சென்று வெறுங்கையுடன் வந்தான். மலையடிவாரத்தில் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த ஒருவனைக் காப்பாற்றியதால் மூலிகையைக் கொண்டு வர முடியாமல் போய்விட்டது. ஆகவே தன்னை மன்னித்துவிடும்படி

கேட்டுக்கொண்டான். மாணவனாகத் தனக்குத் தகுதி இல்லை என்றும் ஒத்துக்கொண்டான்.

கபிலன் மூலிகையைத் தேடிச் சென்றதால் நோயாளி துன்பப்படுவதைப் பார்த்தும் உதவி செய்யவில்லை. ஆகவே இரக்கமற்ற கபிலன் மருத்துவராக முடியாது. விமலனே மருத்துவராக முடியும் என்று வைத்தியர் சொன்னார். கபிலன் வேதனையோடு திரும்பிச் சென்றான்.

பின்வரும் கேள்விகள், மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் ஏற்ற மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து, அதன் விடையைத் தேர்ந்தெடு. அதன் எண்ணை அடைப்பினுள் எழுது. பின் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

10. கண்ணுசாமி யார்?

(1) ஆசிரியர்
(2) மருத்துவர்
(3) மாணவர்
(4) நண்பர் ( )

11. கண்ணுசாமியிடம் மாணவனாக என்ன செய்ய வேண்டும்?

(1) நோயாளியைக் கண்டு பிடிக்க வேண்டும்.
(2) மருத்துவரைக் கண்டுபிடிக்க வேண்டும்.
(3) மலையில் ஏற வேண்டும்.
(4) மூலிகையைக் கொண்டு வர வேண்டும். ( )

12. கபிலன் ஏன் மகிழ்ச்சி அடைந்தான்?

(1) மலை ஏறி முடித்ததால்
(2) அவனை மாணவனாக ஏற்றுக் கொண்டதால்
(3) மூலிகை கிடைத்து விட்டதால்
(4) முதலில் வந்ததால் ( )

13. விமலன் வெறுங்கையுடன் வரக் காரணம் என்ன?

(1) நோயாளிக்கு உதவியதால்
(2) மூலிகை கிடைக்காததால்
(3) மாணவனாக விரும்பாததால்
(4) நீண்டநேரம் ஆகிவிட்டதால் ( )

14. விமலன் எப்படிப்பட்டவன் என்று நீ நினைக்கிறாய்?

(1) இரக்கமற்றவன்
(2) அன்புள்ளவன்
(3) இரக்கமுள்ளவன்
(4) ஏமாற்றுக்காரன் ( )

## முன்னுணர்வுக் கருத்தறிதல்

கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்பினுள் எழுது. (8 மதிப்பெண்கள்)

கடைக்குச் சென்றுவிட்டு விமலா தன் தாயாருடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். அவள் (15) ____________ போட்டுக் கொண்டே நடந்தாள். வழியில் ஒரு மரக்கட்டைக் கிடப்பதைக் கவனிக்கவில்லை. அவள் அம்மரக்கட்டையில் மோதினாள். (16) ________ தாங்க முடியாமல் விமலா அலறினாள். பெருவிரலிலிருந்து இரத்தம் வழிந்தது. உடனே அம்மா தன் கைக்குட்டையை (17) ____________. இரத்தம் வெளியாகாமல் இருக்க கைக்குட்டையைக் கொண்டு காயம்பட்ட இடத்தை இறுக்கிக் கட்டினார்.

இருவரும் அங்கிருந்து மருத்துவமனைக்குச் சென்றனர். மருத்துவர் (18) ____________ மருந்து போட்டார். பாவம்! விமலா மிகவும் சோர்ந்துவிட்டாள். அவளால் நடக்கக்கூட முடியவில்லை. விமலாவுக்கு இது ஒரு நல்ல பாடமாக அமைந்தது.

| | |
|---|---|
| 1. எடுத்தார் | 2. பாடல் |
| 3. வைத்தார் | 4. ஆட்டம் |
| 5. வலி | 6. அடி |
| 7. வலிக்கு | 8. காயத்திற்கு |

## சுயவிடைக் கருத்தறிதல்

**கீழ்க்காணும் கதையைக் கவனமாகப் படி. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுது. (9 மதிப்பெண்கள்)**

ஒரு காட்டில் உயர்ந்த பெரிய மரம் ஒன்று இருந்தது. அதன் கிளைகளில் ஏராளமான பறவைகள் உல்லாசமாக வாழ்ந்து வந்தன. அதன் அடிமரம் நீண்டு வளர்ந்து இருந்தது. வேடர்களால் அந்த மரத்தில் ஏறி பறவைகளைப் பிடிக்க முடியவில்லை. அதனால், அவை அச்சமின்றி வாழ்ந்தன.

கொடி ஒன்று அம்மரத்தினடியில் வளர்ந்தது. அது மரத்தில் படரத் தொடங்கியது. இதைப் பார்த்த கிழப்பறவை உடனே அக்கொடியைப் பறித்து எறியச் சொன்னது. "அதை எறியாவிட்டால், கொடி வளர்ந்தவுடன் அதைப் பிடித்துக்கொண்டு வேடர்கள் மேலே ஏறி

வந்துவிடுவார்கள். நம்மைப் பிடித்துவிடுவார்கள்," என்று எச்சரித்தது. இதைக் கேட்ட மற்ற பறவைகள் சிரித்தன. "எங்களைக் காப்பாற்றிக்கொள்ள எங்களுக்குத் தெரியும்," என்று ஏளனமாகப் பேசின.

கொடி வளர்ந்ததும் வேடன் மரத்தில் ஏறி வலையை விரித்து வைத்தான். மாலை நேரத்தில் திரும்பி வந்த பறவைகள் அந்த வலையில் சிக்கிக் கொண்டன. அவை அழுது புலம்பின. அப்போதே கிழப்பறவையின் பேச்சைக் கேட்டிருக்க வேண்டும் என்று எண்ணி வருந்தின.

<u>விடை எழுது.</u>

19. மரக்கிளைகளில் எவை வாழ்ந்து வந்தன ?

______________________________

______________________________

20. வேடர்களால் ஏன் மரத்தில் ஏற முடியவில்லை?

______________________________

______________________________

21. கொடி எங்கு வளர்ந்தது ?

______________________________

______________________________

22. கிழப்பறவை கொடியைப் பறித்து எறியச் சொல்லக் காரணம் என்ன?

______________________________________________

______________________________________________

______________________________________________

23. வலையில் சிக்கிக் கொண்ட பறவைகள் என்ன செய்தன?

______________________________________________

______________________________________________

______________________________________________

**P4**
**TESTPAPER 1**

<u>சமீபத்தில் ராமு........</u>

1. 2 2. 3 3. 1 4. 4

5. 4 6. 3 7. 2 8. 1 9. 1

10. 2 11. 4 12. 3 13. 1 14. 3

15. 4 16. 5 17. 1 18. 8

19. மரக்கிளையில் ஏராளமான பறவைகள் வாழ்ந்து வந்தன.

20. அடிமரம் நீண்டு வளர்ந்து இருந்ததால் வேடர்களால் மரத்தில் ஏற முடியவில்லை.

21. கொடி அம்மரத்தினடியில் வளர்ந்தது.

22. கொடி வளர்ந்து விட்டால், வேடர்கள் அதைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறிப் பறவைகளைப் பிடித்துக் கொள்வார்கள். அதனால் கிழப் பறவை கொடியைப் பறித்து எறியச் சொன்னது.

23. வலையில் சிக்கிக் கொண்ட பறவைகள் அழுது புலம்பின.